**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**
**தலைமை இடம் - சென்னை.**

**K.சந்திரசேகரன்** **R.சந்திரசேகரன்.**
**தலைவர்** **பொதுச்செயலாளர்**

06-09-2017

# சுற்றறிக்கை எண் 16

அன்புடையீர்,

வணக்கம். மின்சாரத் தொழிலாளர்களின் 1.12.2015-க்கான ஊதிய உயர்வு குறித்து 4-வது சுற்றுப் பேச்சு வார்த்தை இன்று நடைபெற்றது. பேச்சு வார்த்தையில் பொதுச்செயலாளருடன் சங்கத்தலைவர், நிதிச்செயலாளர், மாநில மகளிர் அணி செயலாளர் மற்றும் அமைப்புச்செயலாளர் ஆகிய 5 பேர் கலந்து கொண்டனர். நாம் ஏற்கனவே தெரிவித்தப்படி நிர்வாகம் ஊதிய உயர்வுக்கான தனது முன்மொழிவை சங்கங்களுக்கு அளித்துள்ளது.

1. 1.1.2016 அன்று பெற்ற அடிப்படை ஊதியத்துடன் தர ஊதியத்தை சேர்த்து 2.37-ஆல் பெருக்கி புதிய ஊதிய விகிதத்தில் பொருத்தப்படும்.
2. குறைந்த பட்ச ஊதிய உயர்வு 760 ரூபாய் வழங்கப்படும்.
3. 1.1.2016-ல் பெற்ற 125 சதவீத அகவிலைப்படியும், தர ஊதியமும் அடிப்படை ஊதியத்தோடு ஒன்றாக்கப்படும்.
4. புதிய சம்பளம் நிர்ணயத்திற்கு ஏற்கனவே பெற்ற தனி ஊதியம் (Personal Pay) கணக்கிலெடுக்கப்படும்.
5. 1.1.2016-ல் 125 சதவிகிதம் அகவிலைப்படி சம்பளத்துடன் சேர்க்கப்பட்டு விடுவதால் அன்றைய தேதியில் அகவிலைப்படி 0% ஆகும். அதற்குப்பிறகு மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் அதே தேதியில், அதே விகிதத்தில் மின்சாரத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.
6. வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, சிறப்பு ஊதியங்கள் மற்றும் இதர படிகள் தற்போதுள்ள விகிதத்திலேயே, அரசு ஊழியர்களுக்கு மாற்றம் செய்யப்படும் வரை தொடர்ந்து இருக்கும்.

சுருங்கக் கூறினால் மேற்கூறிய முன்மொழிவின்படி மின்சாரத் தொழிலாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய (National Minimum Wage) குறைந்தபட்ச ஊதியம் 18,000 கிடைக்காது. மாறாக 17,300 ரூபாய் மட்டுமே கிடைக்கும். மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 2.57 மடங்கு ஊதியம் மற்றும் 14.3 சதவீதம் கிடைப்பதற்குப் பதிலாக 2.37 மடங்கு ஊதியம் வழங்குவதால் 5.3 சதவீதம் ஊதிய உயர்வு மட்டுமே கிடைக்கும்.

மேலும் மின்வாரியத்தில் 1.1.2016-ல் அடிப்படை ஊதியம் ரூ.5,400-+ தரஊதியம் பெறும் துவக்க நிலை ஊழியர்களுக்கு, 2.57 மடங்கு ஊதியம் வழங்கினால் குறைந்த பட்ச பணப்பலன் ரூ.2,335- கிடைக்கும். ஆனால் 2.37 மடங்கு ஊதியம் வழங்கினால் குறைந்த பட்ச பணப்பலன் ரூ.875- மட்டுமே கிடைக்கும். வித்தியாசம் 1,460- ரூபாய் ஆகும்.

இது கடந்த 5 மற்றும் 6-வது மத்திய அரசின் ஊதியக்குழு பரிந்துரைப்படி மின்வாரியத்தில் 1.12.1996 மற்றும் 1.12.2007 ஊதிய மாற்றங்களின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைக்கு மாறானது என்பதை நிர்வாகத்திற்குத் தெரிவித்தோம்

மத்திய அரசின் 7-வது ஊதியக்குழு பரிந்துரையை மாநில அரசு அமுல்படுத்திய பின் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றிருந்தால் மேற்கூறிய இந்த அவல நிலை ஏற்பட்டிருக்காதென்று கருதுகிறோம்.

மத்திய அரசின் 7-வது ஊதியக்குழு பரிந்துரைகளை தமிழக அரசு ஊழியர்களுக்கும் அமுல்படுத்திட நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை 30.09.2017-க்குள் பெற்று விரைவில் ஊதிய உயர்வு வழங்குவோம். ஒருவேளை தாமதமானால் இடைக்கால நிவாரணம் வழங்குவோம் என்று தமிழக முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். எனவே நாமும் ஓரிரு மாதங்கள் காத்திருந்து மாநில அரசு ஊழியர்கள் பெறுகின்ற அதே ஊதிய உயர்வு அல்லது இடைக்கால நிவாரணத்தை பெறுவதே விவேகமானது. அதற்கான சூழ்நிலையை அனைவரும் உருவாக்கிட வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுள்ள,

பொதுச் செயலாளர்

பெறுநர்
கிளைச் செயலாளர்கள்,
கோட்டச்செயலாளர்கள்,
வட்டச் செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச் செயலாளர்கள் மற்றும் மத்திய சங்க பொறுப்பாளர்கள்

நகல்
செய்திமடல்